முதலமைச்சர் விஜய் கையில் மனு கொடுத்தால், படித்துக் கூட பார்க்காமல் குப்பையில் வீசுவதா?

தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி!

முதலமைச்சர் விஜய் கையில் மனு கொடுத்தால், அதைப் படித்துக் கூட பார்க்காமல் குப்பையில் வீசுவதா? இதுதான் 'மாற்றம்' தருவதாகச் சொல்லும் முதலமைச்சரின் செயலா?

மக்களின் கோரிக்கைகளைக் கனிவுடன் கேட்டு நிவர்த்தி செய்ய வேண்டிய முதலமைச்சரே, அதுவும் இடைத்தேர்தல் நடைபெறும் தொகுதி மக்களின் கோரிக்கையைக் குப்பையில் வீசுவது எந்த வகையில் நியாயம்?

ஓட்டு கேட்கும் முன்பே இப்படிப்பட்ட அநாகரிகச் செயலில் ஈடுபடுபவர்களுக்கு, வாக்களித்து வெற்றி பெற வைத்தால் இந்தத் தொகுதியின் நிலை என்னாவது?

மக்கள் அனைவரும் விழித்துக் கொள்வதற்கு இது ஒரு சிறந்த பாடம்!





மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ. பரந்தாமன் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் அகிலி ஊராட்சி செண்டிவாக்கம் கிராமத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அச்சுறுப்பாக்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் தம்பு முன்னிலையில் வாக்காளர்களிடத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மதுராந்தகம் தெற்கு ஒன்றியம் குன்னத்தூர் ஊராட்சி பாகம் எண்.85ல் குன்னத்தூர் கிராமத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வீடு வீடாக சென்று, கழக அரசின் சாதனைகளையும் தற்போது உள்ள அரசின் அவலங்களையும், பொது மக்களிடம் எடுத்துரைத்து, துண்டுப் பிரசுரங்களை வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.உடன் மாவட்ட பிரதிநிதி ஒன்றிய கவுன்சிலர் டி.ரோக்கும்மா, குன்னத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜி.ஸ்டீபன்சவரி,பகுதி செயலாளர் டி.காமராஜ்,எஸ்.இந்திரன்,கிளை கழக செயலாளர் எஸ்.பத்மநாபன்,கே.வெங்கடேசன்,பி.அரிபாலசந்தர் தலைமை கழக பேச்சாளர் ஆகியோருடன் தாம்பரம் மாநகர கழக தோழர்கள், மற்றும் குன்னத்தூர் கிராம கழக தோழர்கள் உள்ளனர்.

தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர்

ஈ.ராஜா எம்.எல்.ஏ. சகோதரர் ஈ.பாலமுருகன் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

தென்காசி, அக்.04-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

கழக மூத்த முன்னோடி ஈ.ஸ்வரன் புதல்வரும், தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ. ராஜாவின் அண்ணனும், தென்காசி 31-வது நகர்மன்ற உறுப்பினருமான ஈ.பாலமுருகன் நேற்று (03.10.2026) சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மறைவெய்தினார்என்பதறிந்துமிகவும்துயருற்றேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், மாவட்டக் கழகச் செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ.வுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்டாளர் இ.பரந்தாமனை ஆதரித்து பள்ளியகரம் கிராமத்தில் உள்ள வாக்காளரிடம் உதயசூரியன் சின்னத்திற்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வாக்கு சேகரித்தார். இதில் ஜே.ஜே. எபினேசர், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆர்.டி.ராஜா, எம்.லோகநாதன், எம். கோவிந்தராஜ், என்.எம்.கதிரேசன், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, கி.தேவன், சசிகுமார், ராஜன், ஏழுமலை, எல்.ரமேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அச்சிறுப்பாக்கத்தில்

கிராமம் கிராமமாக சென்று தி.மு.க. வேட்பாளர் பரந்தாமன் வாக்கு சேகரிப்பு!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில்!

அச்சிறுப்பாக்கம், அக். 4

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் களம் நாளுக்கு நாள் கூடுபிடித்து வருகிறது. இத்தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் இ. பரந்தாமன், அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில் கிராமம் கிராமமாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு, மாநில செயற்குழு உறுப்பினர்கள் செஞ்சி விஜயகுமார், மேல்மலையனூர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில்

கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அகிலி செண்டிவாக்கம்,டிவிஎஸ் நகர் ,அகிலி ஆதிதிராவிடர் நலப் பகுதி ,மலைவாழ் மக்கள் பகுதி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கு சென்று பொதுமக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டார்.

அப்போது கிராம மக்கள் வேட்பாளர் பரந்தாமனுக்கு மலர் தூவி, ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். பெண்கள் திரளாக கலந்து கொண்டு தங்கள் ஆதரவை தெரிவித்தனர்.

வாக்காளர்களிடையே பேசிய வேட்பாளர் இ. பரந்தாமன், "நான் உங்கள் வீட்டு பிள்ளையாக உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு வந்துள்ளேன்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேட்பாளராகவும், கழக இளைஞரணி செயலாளர்எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வேட்பாளராகவும் உங்களை நாடி வந்துள்ளேன்.

மதுராந்தகம் தொகுதியின் வளர்ச்சிக்காகவும், உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றவும், தொடர்ந்து திமுக அரசு கொண்டு வந்துள்ள திட்டங்கள் உங்களை வந்தடையவும் நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உருக்கமாக கேட்டுக்கொண்ட அவர்

"வாழ்க்கை வேற, சினிமா வேற. கடந்த தேர்தலில் ஏதோ ஒரு மோகத்தில், என் பையன் சொல்லிட்டான், என் பேரன் சொல்லிட்டான் என்று சொல்லி நாம் எல்லாம் தவறான முடிவை எடுத்துவிட்டோம். ஆனால் இந்த 5 மாதத்தில் நாம் என்ன அவதிப்படுகிறோம்? விலைவாசி என்ன விலை விற்கிறது? கரண்ட் பில் எப்படி இருக்கிறது? கரண்ட் கட் எப்படி இருக்கிறது?

முதலமைச்சர்விஜய் சொன்ன எந்த ஒரு வாக்குறுதியும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஒரு மனிதன் சரியானவன், மக்களுக்கு பணியாற்றக் கூடியவன் என்பதை எதை வைத்து சொல்ல வேண்டும் என்றால், சொன்ன வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும்.

முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் ஐயா, மகளிர் உரிமைத் தொகை 1000 ரூபாய் கொடுப்பேன் என்று சொன்னார். இன்று வரை அந்த தொகையை நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் 2500 ரூபாய் கொடுப்பேன் என்று சொன்ன திரு.விஜய், இதுவரை கொடுத்திருக்கிறாரா? 6 சிலிண்டர் இலவசமாக கொடுப்பேன் என்று சொன்னாரே, கொடுத்திருக்கிறாரா?

தேர்தல் நேரத்தில் மு.க.ஸ்டாலின் அவர்கள், நான் இப்போது 1000 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறேன், என்னை மீண்டும் முதலமைச்சர் ஆக்குங்கள், உங்களுக்கு 2000 ரூபாயாக தருகிறேன் என்று வாக்குறுதி கொடுத்தார்.

இப்போது நினைத்துப் பாருங்கள் தாய்மார்களே, இந்த நிமிடம் மு.க.ஸ்டாலின் ஐயா முதலமைச்சராக இருந்திருந்தால், இந்த 5 மாதமும் 2000, 2000 என்று வாங்கியிருப்போமா இல்லையா? என்று கேட்டு பிரச்சாரம் செய்தார்.

பிரச்சாரத்தில் காஞ்சிபுரம் எம்.பி. செல்வம்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர் விஜயராகவன், ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன், அகிலி ஊராட்சி நிர்வாகிகள் மார்டின், வேளாங்கண்ணி, ஆல்பர்ட், வருன், விஜயன், வரதராஜன், சீனு, சசிகுமார், சக்திவேல் செஞ்சி மேல் மலையனூர் ஒன்றிய நிர்வாகிகள் வாசு அய்யாதுரை,செல்வமணி, அர்ஷத், எஸ்.பி.சம்பத்,செந்தில்குமார், சிவ பிரகாசம், மணிவண்ணன், ஜம்போதி பழனி, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து தொகுதிக்குட்பட்ட முன்னூத்திக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு, தெற்கு, மத்தியம் ஆகிய ஒன்றியங்களில் மாவட்ட செயலாளர் தா.மோ .அன்பரசன் ஆணைக்கிணங்க மாநில ஆதிதிராவிட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ கிருஷ்ணசாமி தலைமையில் தீவிர வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்ச்சியில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ வந்தே மாதரம், மாவட்ட ஆதிதிராவிட நல குழு அமைப்பாளர் தி.க. பாஸ்கரன், மறைமலைநகர் முருகேசன், தா. அன்பழகன், ஊராட்சி மன்றத் தலைவர் பா. சுதாகர், எஸ். ஜனார்த்தனன், எஸ். பாலா, ஏ. சுந்தரமூர்த்தி, ராமகிருஷ்ணன், ப. அறிவொளி, அ. ஜமீர், பொன் ரமேஷ் கவி, நந்தகோபால், மா.சே. பிரகாஷ், பா. குமரவேல், அ.மணி, தமிழரசன், முகலிவாக்கம் செல்வராஜ், வீரமணி, முள்ளி கிளை கழக செயலாளர் எத்திராஜ், பல்லாவரம் உதயா முத்து, மூன்னூத்திக்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் ஜோதிலிங்கம், கிளை கழக செயலாளர்கள் எத்திராஜ், சண்முகம், மூர்த்தி , லட்சுமணன், ஷகிலா செல்வம், த.ஏசு தாஸ், சிதம்பராஜா மற்றும் வடக்கு, தெற்கு, மத்திய ஒன்றிய நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டார்கள்.



மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனையின் பேரில் மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் தலைமையில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம், வெள்ளப்புத்தூர் ஊராட்சி, பாகம் எண்.43ல் வசிக்கும் பொதுமக்களை நேரில் சந்தித்து துண்டுப் பிரசுரம் வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். உடன் சேப்பாக்கம் பகுதி 62வது வட்டக்கழக செயலாளர் ஆர்.ஜெகதீசன், வெள்ளப்புத்தூர் கிளை கழகச் செயலாளர் ஏழுமலை, தமிழ்மணி, சீனிவாசன், ஜான் பாட்ஷா, கருணாகரன், மாணவர் அணி யோகேஷ் மற்றும் உள்ளூர் கழக நிர்வாகிகள் வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வீடுவீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்டாளர் இ.பரந்தாமனை ஆதரித்து பள்ளியகரம் கிராமத்தில் உள்ள வாக்காளரிடம் உதயசூரியன் சின்னத்திற்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வாக்கு சேகரித்தார். இதில் ஜே.ஜே. எபினேசர், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆர்.டி.ராஜா, எம்.லோகநாதன், எம். கோவிந்தராஜ், என்.எம்.கதிரேசன், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, கி.தேவன், சசிகுமார், ராஜன், ஏழுமலை, எல்.ரமேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்றத் இடைதேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட புக்கத்துறை பகுதியில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.நரேந்திரன் தலைமையில் தீவிர வாக்கு சேகரிக்கும் பணியில் மாவட்ட பொருளாளர் வி. தயாளன், பொதுக்குழு உறுப்பினர் டி.கமலக்கண்ணன், கழக நிர்வாகிகள் ராஜசேகர், சாந்தி, வினோத், உதயா, கோபி, அப்பாஸ், சின்னா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு ஆலோசனையின் பேரில் மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் தலைமையில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம், வெள்ளப்புத்தூர் ஊராட்சி, பாகம் எண்.43ல் வசிக்கும் பொதுமக்களை நேரில் சந்தித்து துண்டுப் பிரசுரம் வழங்கி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். உடன் சேப்பாக்கம் பகுதி 62வது வட்டக்கழக செயலாளர் ஆர்.ஜெகதீசன், வெள்ளப்புத்தூர் கிளை கழகச் செயலாளர் ஏழுமலை, தமிழ்மணி, சீனிவாசன், ஜான் பாட்ஷா, கருணாகரன், மாணவர் அணி யோகேஷ் மற்றும் உள்ளூர் கழக நிர்வாகிகள் வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வீடுவீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவுறுத்தலின்படி மதுராந்தகம் இடைத்தேர்தல் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து கொடி தண்டலம் கிராமத்தில் கிளைச் செயலாளர் கண்ணன் தலைமையில் பாகம் எண்.13ல் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், 51வது வட்ட செயலாளர் க. கோவிந்தராஜ், உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். உடன் க.நாகம்மை கருப்பையா, எஸ். குமார், ஜி.உமாபதி, பி.எஸ்.நாராயணன், எஸ்.மாரியப்பன், யு. மதன்குமார், குடியரசு ஆகியோர் வாக்கு சேகரித்தனர்.